දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2784825

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ……………………….

අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி அமைச்சு

Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල

'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ED/01/26/23/02/01

දිනය / திகதி / Date 2014.04. 29

**சுற்றறிக்கை இல.: 15/2014**

மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.

**மாகாண மற்றும் வலய தகவல் தொடர்புசாதனத் தொழில்நுட்ப மத்திய நிலையத்தினைப் பலப்படுத்தலும் விருத்தி செய்தலும்**

மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கின் இடைக்கால அபிவிருத்திப் பிரவேசத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பத்தினை மேம்படுத்துவதற்காக மாகாண மற்றும் வலய தகவல் தொடர்புசாதனத் தொழில்நுட்ப மத்திய நிலையங்களைப் பலப்படுத்தலும், விருத்தி செய்வதன் அடிப்படையிலும் நிதி மற்றும் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் விளக்கத்துடன் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க யோசனைக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் இதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமையச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தயவாய் அறியத்தருகிறேன்.

1) ஏற்கனவே வலய தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பப் பணிகளின் இணைப்புக்களை மேற்கொள்ளும் உதவிக் கல்விப் பணிப்பாளர் / பிரதிக் கல்விப் பணிப்பாளரின் முகாமைத்துவத்தின் கீழ் பிராந்திய தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப மத்திய நிலையமும், மாகாண தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்ப செயற்பாடுகள் தொடர்பான இணைப்புப் பணிகளை மேற்கொள்ளும் உதவிக் கல்விப் பணிப்பாளர் / பிரதிக் கல்விப் பணிப்பாளரின் முகாமைத்துவத்தின் கீழ் மாகாண மற்றும் மாகாண தகவல் இணைப்பு மத்திய நிலையத்தினை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் (இது புதிய நியமனம் அல்ல)

   இதற்கு மேலதிகமாக சகல மத்திய நிலைய நிர்வாகம் உட்பட முகாமைத்துவ பணிகள் உரிய வலய அலுவலகங்கள் மூலம் மாகாணத்தின் கீழ் நியமிக்கப்படுவதுடன் பாட இணைப் பணிகள் தொடர்பான இணைப்புக்கள் நிர்வாக மற்றும் முகாமைத்துவப் பணிகளின் இறுதிப் பொறுப்பினை கல்வி அமைச்சின் விடயப் பணிப்பாளருக்குப் பொறுப்பளித்தல்.

2) இவ்விரு வகையான மத்திய நிலையங்களினதும் பயிற்றுவிப்புப் பணிகள் தொடர்பான ஆலோசகர்களாக தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பப் பாடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர்கள் உயர்ந்தபட்சம் மூன்று பேர்களை மத்திய

நிலையங்களுக்கு இணைப்புச் செய்வதன் மூலம் முகாமைத்துவ, நிர்வாகச் செயற்பாடுகளின் பயிற்சி வேலைத்திட்டங்களின் விரிவான முறையில் உறுதிப்படுத்தலும், உற்பத்தித் திறனை உறுதிப்படுத்தலும்.

3) பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்காக தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பப் பாடத்திற்காக தேசிய தொழில்சார் தகைமை (NVQ) வழங்குவதற்காக 3ம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுச் சபை (TVEC) உடன் இணைப்புப் பாடநெறிகளை நடாத்துதல்.

இதற்கு மேலதிகமாக மத்திய நிலைய இணைப்புப் பணிகளை மேற்கொள்ளும் போது காணப்படும் மத்திய நிலையங்கள் தொடர்பில் கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தங்களது கவனத்தினை ஈர்க்கச் செய்கிறேன்.

i. மத்திய நிலையங்கள் அற்ற வலயங்கள் அலல்து மாகாணங்களுக்காக புதிய மத்திய நிலையங்களை நிர்மாணிக்கும் போது அவ்வவ் மத்திய நிலையங்கள் அல்லது மாகாணங்களுக்குரிய வலயக் கல்வி அலுவலகம் அல்லது மாகாணக் கல்வித் திணைக்கள வளாகத்தில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வது அத்தியவசியமாகும். இதற்காகப் போதியளவு இடவசதிகள் இன்றியிருப்பின் மாத்திரம் மத்திய நிலையத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவப் பணிகளின் வசதிக்காக அதற்கு அருகாமையில் உள்ள வேறு பொருத்தமான இடத்தினைத் தாபிக்க வேண்டும்.

ii. வலய கணினி மத்திய நிலையம் அவ்வலயத்தின் தகவல் தொழில்நட்பத்தினை மேம்படுத்துவதற்கு மேலதிகமாக பாடசாலை முறையில் காணப்படும் தகவல்களை பரிமாற்றும் மத்திய நிலைய வலையமைப்பு (Information System Network) எனத் தாபிப்பது அத்தியவசியம் என்பதுடன் அவ்வாறாயின், வலயத்துக்குள் தகவல் தொழில்நுட்பப் பணிகளுக்காக இம்மத்திய நிலையங்களைப் பயன்படுத்துவதற்கான பொறுப்புக்களை வழங்குவது உட்பட இணைப்புப் பணிகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

**அனுர திசாநாயக்க**
செயலாளர்,
கல்வி அமைச்சு.

**பிரதிகள் :**

1. ஜனாதிபதியின் செயலாளர்.
2. கணக்காய்வாளர் நாயகம்.
3. செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு.
4. மாகாண பிரதம செயலாளர்.
5. பணிப்பாளர் நாயபகம், தேசிய கல்வி நிறுவகம்.
6. கல்விப் பணிப்பாளர், தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம், கல்வி அமைச்சு.